

திருவள்ளூர் மத்திய மாவட்ட திருநின்றவூர் நகர இளைஞரணி சார்பில் தெருமுனை பிரச்சாரம் கூட்டம் நகரச் செயலாளர் தி.வை.இரவி தலைமையில் மாநில மாவட்ட இளைஞரணி நிர்வாகிகள் பிரபு கஜேந்திரன், கே.சுரேஷ்குமார், நகர இளைஞரணி எஸ்.சுதர்சனம் ஆகியோர் வரவேற்பில் நடைபெற்றது. இதில் மாவட்ட செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் திமுக அரசின் சாதனைகளை விளக்கி சிறப்புரையாற்றினார் உடன் தூத்துக்குடி சரத் பாலா, டெக்சின் ரோமேரியோ, கே.ஜெ.ரமேஷ், உஷாராணி ரவி , ஜி.விமல் வர்ஷன், ஆர். செந்தாமரை , ஜி.சி.சி.கருணாநிதி , அக்னி ராஜேஷ், பிரியா குமார், ஜெ. அன்பழகன், கமலக்கண்ணன் , நாகராஜ் , ரவி, பாபு குணசேகரன் , தங்கமணி, பட்டாணி கார்த்திக் , ஆர்.ஸ்டீவ்வாக், ஜெ.பிரசன்னா, ராகேஷ் கண்ணா, துரையரசன், ஏ.உதய, மோகனகிருஷ்ணன் சலீம், த.குமரேசன், ஆர் பிரவீன் குமார், பி.எல்.ஆர்.யோகா, வ.ஹரி, கோடீஸ்வரன் , ஏகாம்பரம், பால்ராஜ், வெங்கடேசன், மாதவன், மு.பா. மகேஷ், மேகநாதன், முரளி, பாஸ்கரன் , செந்தில் வேல், ரவிச்சந்திரன், தி.தெ.பாபு, தெய்வசிகாமணி ராதா ரவிச்சந்திரன், ஹரிபாலன், வி.மகேஷ் குமார், உள்பட பலர் உள்ளனர்.

## மாற்றுத் திறனாளிகள், தமிழறிஞர்களுக்கு

# கட்டணமில்லா பயண அட்டைகள் வழங்க கால நீட்டிப்பு!

### அமைச்சர் சா.சி.சிவசங்கர் தகவல்!



சென்னை, ஜூன் 26-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களில், மாற்றுத்திறனாளிகள், சுதந்திரப்போராட்ட வீரர்கள், தமிழறிஞர்கள் மற்றும் அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் உள்ளிட்டவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் கட்டணமில்லா பயண அட்டைகளை இணையதளம் வாயிலாக பெற்றிடும் வகையில், 07.09.2023 முதல் முதற் கட்டமாக மாநகர் போக்குவரத்துக் கழகத்தில், செயல் படுத்தப்பட்டது,

மாநிலம் முழுவதும் உள்ள பயனாளிகள் அனைவரும் கட்டணமில்லா பயண அட்டைகளை இணையதளம் வழியாக பெறுகின்ற வசதியினை அனைத்து போக்குவரத்துக் கழகங்களிலும் நடைமுறைப் படுத்த புதிய வசதிகளுடன் கூடிய மென் பொருள் தயாரிப்பு பணிகள் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (TNEGA) வழியாக மேற்கொள்ளப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இதனை செயல்படுத்த, போதிய கால அவகாசம் தேவைப்படுகின்ற நிலையில், ஏற்கனவே பயனாளிகள் பயன்படுத்தி வரும் 31/03/2025 வரை செல்லத்தக்க கட்டணமில்லா பயண அட்டைகளை, 30/09/2025 வரை மேலும் நீட்டித்து பயணிகள் சிரமமின்றி பயணம் செய்யலாம் என போக்குவரத்துத்துறை அமைச்சர் சா. சி.சிவசங்கர் தகவல்

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் சட்ட மன்ற நிகழ்வில், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் வழங்கப்பட்டு வரும் கட்டணமில்லா பயண அட்டைகளை இணையதளம் வாயிலாக விண்ணப்பித்து, பயனாளிகள் பெற்றிட வழிவகை செய்யப்படும் என அறிவித்ததன் அடிப்படையில், இத்திட்டத்தினை செயல்படுத்தும் பொருட்டு, தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (TNEGA) வழியாக மாற்றுத்திறனாளிகள், சுதந்திரப்போராட்ட வீரர்கள், தமிழறிஞர்கள் மற்றும் அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் உள்ளிட்டவர்களுக்கு இணையதளம் வாயிலாக கட்டணமில்லா பயணஅட்டைகளை பெறும்வசதி, முதற் கட்டமாக மாநகர் போக்குவரத்துக் கழகத்தில் அறிமுகப் படுத்தப்பட்டது. இந்த வசதியினை அனைத்து போக்குவரத்துக் கழகங்களுக்கும் விரிவுபடுத்தி இலவச பயண அட்டைகளை புதியதாக பெறவும், ஏற்கனவே உள்ள பயண அட்டைகளை புதுப்பிக்கவும் ஏதுவாக புதிய வசதிகளுடன் கூடிய மென் பொருள் தயாரிப்பு பணிகள், தமிழ்நாடு மின் ஆளுமை முகமை வழியாக (TNEGA) தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இதனை செயல்படுத்த போதிய கால அவகாசம் தேவைப்படுகின்ற நிலையில், பயனாளிகள் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையிடம் ஏற்கனவே பயன்படுத்தி வரும் பயண அட்டைகளை மேலும் மூன்று மாத காலம் நீட்டித்து தருமாறு கோரிக்கை வைத்துள்ளனர். இதனை கருத்தில் கொண்டு, 31/03/2025 வரை செல்லத்தக்க கட்டணமில்லா பயண அட்டைகளை, 30/09/2025 வரை நீட்டித்து அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளில் அனைத்து பயனாளிகளும் எவ்வித சிரமமின்றி பயணம் செய்யும் வகையில் அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

## மாவட்டச் செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் தலைமையில்

# கலைஞர் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு - திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் பொன்னேரியில் செம்மொழி நாள் - மாபெரும் பொதுக்கூட்டம்!

### அமைச்சர்கள் கோ.வி.செழியன் – ஆவடி சா.மு.நாசர் சிறப்புரையாற்றினார்கள்!

திருவள்ளூர், ஜூன் 26-

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் திமுக சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு பொன்னேரியில் நூற்றாண்டு கண்ட முத்தமிழ் அறிஞரின் செம்மொழி நாள் மாபெரும் பொதுக்கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் தலைமையில் நடைபெற்று இதில் மாவட்ட அவைத்தலைவர் மு.பகலவன் நகர கழக செயலாளர் ஜி.ரவிக்குமார் நகர் மன்ற தலைவர் பரிமளம் விஸ்வநாதன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றினார்கள்

தலைமை செயற்குழு உறுப்பினர் பி.ஜெ.மூர்த்தி, மாவட்ட நிர்வாகிகள் கே.வி. ஜி. உமாமகேஸ்வரி, மு.கதிரவன், எஸ். ரமேஷ், சுப்பிரமணி, ஏ.வி.ராமமூர்த்தி, பா.செ. குணசேகரன், பி.வெங்க டாஜலபதி, ஒன்றிய கழக ச் செயலாளர்கள் ந. செல்வ சேகரன், மு. முரளிதரன், கா.சு.ஜெகதீசன் , ஆ. ராஜா , ஏ.ஆர்.டி.உதயசூரியன், வே.ஆனந்தகுமார், பி. முத்து, க.சு.தமிழ உதயன், ருக்மணி மோகன்ராஜ் நகரக் கழக நிர்வாகி கள் செங்கல்வராயன், நீலகண்டன், பரிதா ஜெகன், ஜவகர், ராமலிங்கம் , வாசுதேவன் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு உயர்கல்வித்துறை அமைச்சர் கோ.வி.செழியன், சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் ஆகியோர் கலந்து கொண்டு முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் செய்த சாதனைகளை திமுக அரசின் நான்காம் ஆண்டு சாதனைகளையும் விளக்கி சிறப்புரை ஆற்றினார்கள் இதனை தொடர்ந்து பேசிய உயர் கல்வித்துறை அமைச்சர்

கலைஞர் என்ற மாமனிதன் தான் எல்லா அரசியல் கட்சிகளுக்கும் அரசியல் தலைவர்களுக்கும் ஒரு இலக்கணம் எனவும், எத்தனையோ தலைவர்கள் தேர்தலில் நின்று வென்றார்கள் தோற்றார்கள் என வரலாறு உண்டு ஆனால் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் நின்ற தேர்தல்கள் அனைத்திலும் வெற்றியை கண்ட ஒரே தலைவர் கலைஞர் தான் என்றும். கலைஞரின் மறைவுக்கு பிறகு திமுக இயக்கத்திற்கு தலைவராக தளபதி வந்தார் சட்டமன்றத் தேர்தல் பாராளுமன்ற தேர்தல் உள்ளாட்சித் தேர்தல் இடைத்தேர்தல் உள்ளிட்ட அனைத்து தேர்தல்களிலும் வெற்றியை கண்ட ஒரே தலைவர் கலைஞரின் பிள்ளை மு.க.ஸ்டாலின் தான் என அமைச்சர் கோவி.வி.செழியன் புகழ்யாரம் சூட்டினார்.

இந்நிகழ்ச்சியில் தலைமை கழக பேச்சாளர் சைதா சாதிக், முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் சி.எச்.சேகர், நிர்வாகிகள் கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், டி.கே.சந்திரசேகர், கி.வே.ஆனந்த் குமார், ந.பரிமளம், ஜான்( எ) பொன்னுசாமி, மற்றும் கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் தலைவர்கள் துணை அமைப்பாளர்கள் துணைத் தலைவர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் இந்நாள் முன்னாள் நிர்வாகிகள் கலந்து கொண்டனர் முடிவில் நகர இளைஞரணி அமைப்பாளர் மா தீபன் நன்றி கூறினார்.



# தி.மு.க. இளைஞர் அணி

## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### தேனி தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.எஸ்.செல்வம் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு தேனி தெற்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியம்–நகரம்–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 26.06.2025 | கம்பம் தெற்கு நகரம் | பார்க் திடல் | இரா.பாண்டியன்<br>இ.நாகூர்கனி<br>இரா.கனிஷ்டா |
| 2 | | கோம்பை பேரூர் | அரண்மனை தெரு | கோம்பை எஸ்.கமாலுதீன்<br>ஜெ.சிந்துஜா |
| 3 | 27.06.2025 | ஆண்டிப்பட்டி மேற்கு ஒன்றியம் | ரெங்கசமுத்திரம் | இரா.பாண்டியன்<br>எஸ்.வர்ஷினி |
| 4 | | உத்தமபாளையம் பேரூர் | தேரடி வீதி | கோம்பை எஸ்.கமாலுதீன்<br>இரா.கனிஷ்டா |
| 5 | 28.06.2025 | உத்தமபாளையம் கிழக்கு ஒன்றியம் | இராயப்பன்பட்டி ஊராட்சி | கோம்பை எஸ்.கமாலுதீன்<br>இரா.கனிஷ்டா |
| 6 | | கம்பம் ஒன்றியம் | சுருளிப்பட்டி ஊராட்சி | எம். ஜெயக்குமார்<br>ஜெ.சிந்துஜா |
| 7 | | ஆண்டிப்பட்டி கிழக்கு ஒன்றியம் | தெப்பம்பட்டி ஊராட்சி | இரா.பாண்டியன்<br>எஸ்.வர்ஷினி |
| 8 | 29.06.2025 | ஹைவேஸ் பேரூர் | வெண்ணியார் எஸ்டேட் | இ. நாகூர்கனி |
| 9 | | சின்னமனூர் நகரம் | ஓடைப்பட்டி ரோடு | இரா.பாண்டியன்<br>இரா.கனிஷ்டா |
| 10 | | கூடலூர் நகரம் | பழைய பேருந்து நிலையம், அண்ணா திடல். | கோம்பை எஸ்.கமாலுதீன்<br>ஜெ.சிந்துஜா |
| 11 | 30.06.2025 | கே.கே.பட்டி பேரூர் | ஈ.பி.ஆபீஸ் அருகில் | எம்.ஜெயக்குமார்<br>ஜெ.சிந்துஜா |
| 12 | | கம்பம் வடக்கு நகரம் | கலைஞர் நூலகம் அருகில் | இரா.பாண்டியன்<br>இ.நாகூர்கனி<br>எஸ்.முருகேசன் |
| 13 | | ஆண்டிப்பட்டி பேரூர் | சக்கம்பட்டி கல்கோவில் அருகில் | கோம்பை எஸ்.கமாலுதீன்<br>இரா.கனிஷ்டா |
| 14 | 01.07.2025 | க.புதுப்பட்டி பேரூர் | காந்தி சிலை அருகில் | இரா.பாண்டியன்<br>ஜெ.சிந்துஜா |
| 15 | | ஓடைப்பட்டி பேரூர் | பேருந்து நிருத்தம் அருகில் | கோம்பை எஸ்.கமாலுதீன்<br>இரா.கனிஷ்டா |
| 16 | 02.07.2025 | அனுமந்தன்பட்டி பேரூர் | வள்ளுவர் திடல் | கோம்பை எஸ்.கமாலுதீன்<br>ஜெ. சிந்துஜா |
| 17 | | சின்னமனூர் கிழக்கு ஒன்றியம் | முத்துலாபுரம் ஊராட்சி | இரா.பாண்டியன்<br>இரா.கனிஷ்டா |
| 18 | 03.07.2025 | கடைமயிலை தெற்கு ஒன்றியம் | வருசநாடு | கம்பம் செல்வேந்திரன்<br>எஸ்.வர்ஷினி |
| 19 | 04.07.2025 | கடைமயிலை வடக்கு ஒன்றியம் | மந்திசுனை மூலக்கடை ஊராட்சி | இரா.பாண்டியன்<br>இரா.கனிஷ்டா |
| 20 | 05.07.2025 | பண்ணைபுரம் பேரூர் | பேருந்து நிறுத்தம் அருகில் | இரா.பாண்டியன்<br>இரா.கனிஷ்டா |
| 21 | | உத்தமபாளையம் மேற்கு ஒன்றியம் | டி.சிந்தலைச்சேரி பேருந்து நிறுத்தம் அருகில் | கோம்பை எஸ்.கமாலுதீன்<br>ஜெ. சிந்துஜா |
| 22 | 06.07.2025 | தேவாரம் பேரூர் | கடைவீதி | இரா.பாண்டியன்<br>இ.நாகூர்கனி |

**தேனி**

நாள் : 25.06.2025

கலைஞர் 100 1924 - 2023




காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் ஒன்றியத்தில் முதலமைச்சரின் கிராம சாலை திட்டத்தின் கீழ் இடையம்பூதூர் முதல் புலிபாக்கம் வரை நடைபெறும் திட்டப் பணியினை உத்திரமேரூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர் பார்வையிட்டார். உடன் சாலவாக்கம் ஒன்றிய கழகச் செயலாளர் தி.குமார், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் கோ.சிவராமன், உதவி செயற்பொறியாளர் விக்டர், அரசு ஒப்பந்ததாரர் யோகானந்தம் உடன் இருந்தனர்.


திருவள்ளூர் மேற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ம. புவனேஷ் குமார் தாயார் ஈஸ்வரி அவர்கள் இயற்கை எய்தினார். தகவல் அறிந்த தமிழ்நாடு சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் நேரில் சென்று குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். அருகில் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.